<u>குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, கரூர்.</u>

<u>முன்னிலை:-</u> திரு: எஸ்.பி.பரத்குமார், எம்.பி.ஏ., எல்.எல்.எம்.,
நீதித்துறை நடுவர் எண்.1 கரூர்

தமிழ் பராபவ வருடம், ஆனி மாதம் 04 ஆம் நாள்,
2026 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 18 ஆம் நாள், வியாழக்கிழமை,

<u>சுருக்குவிசாரணை வழக்கு எண்.194/2026</u>

<table>
<tr><td>1.</td><td>Name of the court</td><td colspan="3">Judicial Magistrate No.1,Karur.</td></tr>
<tr><td>2.</td><td>Name of the Judge</td><td colspan="3">Thiru.S.P.Barathkumar<br>M.B.A.,L.L.M.,</td></tr>
<tr><td>3.</td><td>Date of Judgment</td><td colspan="3">18.06.2026</td></tr>
<tr><td>4.</td><td>Case Number along with CNR Number</td><td colspan="3">STC NO.194/2026<br>CNR- TNKR02-000557-2026</td></tr>
<tr><td>5.</td><td>Name of the Parties of the case</td><td colspan="3">Sub Inspector of police,<br>Karur Town PS /Vs/Amsavalli,<br>S/o Balakrishnan</td></tr>
<tr><td>6.</td><td>Date of Occurrence</td><td colspan="3">01.01.2026</td></tr>
<tr><td>7.</td><td>Date of Complaint</td><td colspan="3">01.01.2026</td></tr>
<tr><td>8.</td><td>Date of Arrest if any and Remand</td><td colspan="3">01.01.2026</td></tr>
<tr><td>9.</td><td>Period of remand of the accused</td><td colspan="3">NIL</td></tr>
<tr><td>10.</td><td>Date of Release on bail</td><td colspan="3">01.01.2026</td></tr>
<tr><td>11.</td><td>Date of Final report</td><td colspan="3">01.01.2026</td></tr>
<tr><td>12.</td><td>Date of Committal of the case to the Court of Session</td><td colspan="3">Nil</td></tr>
<tr><td>13.</td><td>Date of questioning of the accused U/s. 228, 240, 246 and 251 of Code of Criminal Procedure</td><td colspan="3">29.04.2026</td></tr>
<tr><td rowspan="2">14.</td><td rowspan="2">Date of examination in Chief and Cross examination of the witness</td><td>No. of. Witness</td><td>Chief</td><td>Cross</td></tr>
<tr><td>PW-1<br>PW-2</td><td>16.06.2026<br>16.06.2026</td><td>16.06.2026<br>16.06.2026</td></tr>
<tr><td>15.</td><td>Date of filing of all miscellaneous petitions and their results including the results on challenge before</td><td colspan="3">Nil</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | Superior Courts except routine petitions like petition under section 317 of the Code | |
| 16. | Date of examination of the accused U/s. 313 of the Code | 16.06.2026 |
| 17. | Details of abscondence of an accused and his appearance/production as the case may be | Nil |
| 18. | Grant of stay by Superior Courts and the results thereof | Nil |
| 19. | Date of Commencement of Trial | 16.04.2026 |
| 20. | Date of closure of Trial | 16.06.2026 |
| 21. | Date of Sentence or order | 18.06.2026 |
| 22. | Date of service of copy of judgment to the accused | Nil |
| 23. | If any delay, give explanation | Nil |

இவ்வழக்கானது கடந்த 05.02.2026 ம் நாள் இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு, கடந்த 16.06.2026 ஆம் நாள் என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்து, அரசு தரப்பிற்காக அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை-2 கரூர் அவர்கள் ஆஜராகியும், எதிரிக்காக கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.பால்சாமி M.A.,B.L., அவர்கள் ஆஜராகி எடுத்துரைத்தும் இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து இன்று 18.06.2026 ம் நாள் இந்நீதிமன்றம் வழங்கும்,

| | |
|---|---|
| புகார்தாரர் | Sub Inspector of police<br>Karur Town PS<br>கா.கு.எண்.2/2026 |
| எதிரியின் பெயர் | அம்சவள்ளி,<br>க/பெ. பாலகிருஷ்ணன்,<br>திருக்கம்புலியூர்,<br>எல்.என்.எஸ் போஸ்ட்,<br>கரூர் மாவட்டம். |
| அரசு தரப்பில் எதிரி மீது சாட்டப்பட்ட குற்றம் | U/s. 4(1)(C) TNP Act |
| நீதிமன்றத்தால் எதிரி மீது | U/s. 4(1)(C) TNP Act |

| | |
|---|---|
| சாட்டப்பட்ட குற்றம் | |
| எதிரியின் பதில் | குற்றவாளி இல்லை |
| நீதிபதியின் முடிவு | குற்றவாளி இல்லை |
| அரசு கூடுதல் குற்ற வழக்கறிஞர் | செல்வி.முருகேஷ்வரி |
| எதிரி தரப்பு வழக்கறிஞர் | திரு. S.பால்சாமி |
| இருதரப்பு வாதம் கேட்கப்பட்ட நாள் | 16.06.2026 |
| தீர்ப்பு வழங்கப்பட்ட நாள் | 18.06.2026 |

**தீர்ப்புரை**

கடந்த 01.01.2026 ம் தேதி 11.00 மணிக்கு கரூர்நகர காவல்நிலைய சரகம் பாலிடெக்னிக் அருகில் உள்ள முள்காட்டில் இவ்வழக்கின் எதிரி அம்சவள்ளி என்பவர் அரசின் எவ்வித அனுமதியும், உரிமமும் இன்றி தனது சுயலாபம் கருதி சுமார் 180ml அளவுள்ள Honey Day Brandy-7 பாட்டில்கள் மற்றும் சுமார் 650ml அளவுள்ள Black Pearl Beer-6 பாட்டில்களை விற்பனைக்காக வைத்து குற்ற செயல் புரிந்துள்ளார். எனவே எதிரி அம்சவள்ளி என்பவரது செய்கையானது சட்டப்பிரிவு 4(1)(C) TNP Act பிரிவின் படி தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக கரூர்நகர காவல் நிலைய உதவி ஆய்வாளர் அவர்கள் காவல் நிலைய குற்ற எண்.2/2026 ல் எதிரியின் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார். மேற்படி குற்றப்பத்திரிக்கை இந்நீதிமன்றக் கோப்பில் இவ்வழக்காக எஸ்.டி.சி.எண்.194/2026 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது.

2) இவ்வழக்கில் எதிரி நீதிமன்றத்தில் ஆஜரானவுடன், எதிரிக்கு வழங்கப்பட வேண்டிய அரசுதரப்பு வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச.207-ஆவது பிரிவின் படி இலவசமாக வழங்கப்பட்டது.

3) எதிரி மீதான சட்டப்பிரிவு U/s. 4(1)(C) TNP Act ன் படி குற்ற சாராம்சம் குறித்து எடுத்துக்கூறி வினவியபோது, எதிரி குற்றத்தை மறுத்து, பொய் வழக்கு, என்றார். எனவே அரசுதரப்பு சாட்சிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு அரசுதரப்பு சாட்சியின் விசாரணை தொடங்கியது.

4) இவ்வழக்கில் அரசுதரப்பில் அ.சா.1 மற்றும் அ.சா.2 வரையான சாட்சிகள் ஆக விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.4 வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**<u>5) அரசு தரப்பு சாட்சிகளின் சுருக்கம்:-</u>**

i) இவ்வழக்கில் அ.சா.1, தனது சாட்சியத்தில், "நான் கரூர்நகர காவல்நிலையத்தில் தலைமைக்காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 01.01.2026 அன்று கரூர்நகர காவல் உதவி ஆய்வாளர் திரு.நாகராஜன் அவர்களுடன் மதுவிலக்கு ரோந்து அலுவலாக நானும், தலைமைக்காவலர் 1233 திரு.சத்யா உடன் கரூர்நகர காவல்நிலைய எல்லைக்குட்பட்ட பல இடங்களில் ரோந்து அலுவல் செய்து கண்காணித்து வந்து கொண்டிருந்தபோது பாலிடெக்னிக் அருகே உள்ள முள்காட்டில் மதுபானம் விற்பதாக கிடைத்த ரகசிய தகவலின்படி அங்கு சென்று கண்காணித்தபோது எங்களின் வருகையை கண்டவுடன் ஓட முயற்சித்தவரை பிடித்து விசாரித்தபோது அவர் தனது பெயர் அம்சவள்ளி என்றும் தான் எவ்வித அரசு அனுமதியுமின்றி இந்திய தயாரிப்பாலான அயல்நாட்டு மதுவகை பாட்டில்களை தனது சுயலாபம் கருதி விற்பனைக்கு வைத்திருப்பதாக கூறி தனது குற்றத்தை ஒப்புக்கொண்டவரை கைதுக்கான காரணம் கூறி 11.00 மணிக்கு உதவி ஆய்வாளர் கைது செய்தும் அவர் வைத்திருந்த சுமார் 180ml அளவுள்ள Honey Day Brandy-7 பாட்டில்கள் மற்றும் சுமார் 650ml அளவுள்ள Black Pearl Beer-6 ஆகியவை இருந்தன. தனிநபர் சாட்சிகள் யாரும் முன் வராததால் எங்கள் இருவர் முன்னிலையிலும் 11.15 மணிக்கு உதவி ஆய்வாளர் கைப்பற்றுதல்மகசர் மூலம் கைப்பற்றினார். அந்த கைப்பற்றுதல்மகசர் அ.சா.ஆ.1. பின்னர் எதிரியை தடயப் பொருள்களுடன் 11.30 மணிக்கு நிலையம் கொண்டு வந்து நிலைய குற்ற எண்.02/2026, ச.பி 4(1)(C) TNP Act ன் படி வழக்கு பதிவு செய்தார். வழக்கு பதிவு செய்ய உதவியாக இருந்தோம். உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்" என சாட்சியமளித்துள்ளார்.

ii) இவ்வழக்கில் **அ.சா.2**, தனது சாட்சியத்தில்,"நான் கரூர்நகர காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த

01.01.2026 அன்று கரூர்நகர காவல் உதவிஆய்வாளர் திரு.நாகராஜ் அவர்களுடன் மதுவிலக்கு ரோந்து அலுவலாக அவர்களுடன் தலைமைக்காவலர் திரு.யுவராஜ் மற்றும் தலைமைக்காவலர் 1233 திரு.சத்யா என்பவரும் ரோந்து அலுவலாக புறப்பட்டு கரூர்நகர காவல்நிலைய எல்லைக்குட்பட்ட பல இடங்களில் ரோந்து அலுவலாக புறப்பட்டு கண்காணித்து வந்து கொண்டிருந்தபோது பாலிடெக்னிக் அருகில் உள்ள முள்காட்டில் மதுபானம் விற்பதாக கிடைத்த ரகசிய தகவலின்படி அங்கு சென்று கண்காணித்தபோது எங்களின் வருகையை கண்டவுடன் ஓட முயற்சித்தவரை பிடித்து விசாரித்தபோது அவர் தனது பெயர் அம்சவள்ளி என்றும் தான் எவ்வித அரசு அனுமதியுமின்றி இந்திய தயாரிப்பாலான அயல்நாட்டு மது பாட்டில்களை தனது சுயலாபம் கருதி விற்பனைக்கு வைத்திருப்பதாக கூறி தனது குற்றத்தை ஒப்புக்கொண்டவரை கைதுக்கான காரணம் கூறி 11.00 மணிக்கு கைது செய்தும் மேற்படி நபரை சோதனை செய்தபோது சுமார் 180ml அளவுள்ள Honey Day Brandy-7 பாட்டில்கள் மற்றும் சுமார் 650ml அளவுள்ள Black Pearl Beer-6 பாட்டில்கள் இருந்துள்ளன. தனிநபர் சாட்சிகள் யாரும் முன்வராததால் உடனிருந்த போலிசார் சாட்சிகள் முன்னிலையில் 11.15 மணிக்கு கைப்பற்றுதல்மகசர் மூலம் கைப்பற்றினேன். பின்னர் எதிரி மற்றும் தடயப் பொருள்களுடன் நிலையம் கொண்டு வந்து நிலையக் குற்ற எண்.02/2026, ச.பி 4(1)(C) TNP Act ன் படி வழக்கு பதிவு செய்துள்ளார். **அந்த முதல்தகவல் அறிக்கை அ.சா.ஆ.2**. பின்னர் எதிரியை தக்க இருநபர் பிணையத்தில் விடுவித்தேன். பின் வழக்குச்சொத்தைப் படிவம் 91 மூலம் நீதிமன்றம் அனுப்பி வைத்தேன். **அந்த படிவம் 91 அ.சா.ஆ.3**. இத்துடன் எனது புலன்விசாரணையை முடித்து எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார். வழக்கு நிலுவையிலிருந்த போது இந்நீதிமன்றத்தின் உத்தரவுப்படி சாராயமானது கொட்டி அழிக்கப்பட்டு பாட்டில்கள் அரசுக்கு ஆதாயம் செய்ய வட்டாட்சியர் வசம் கொடுக்கப்பட்டது. **அந்த கைப்பற்றப்பட்ட 13 மது பாட்டில்களின் புகைப்படம் அ.சா.ஆ.4**" என சாட்சியமளித்துள்ளார். இத்துடன் அரசுதரப்பு சாட்சி விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது. இத்துடன் அரசுதரப்பு சாட்சி விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது.

6) எதிரியிடம், அரசு தரப்பு சாட்சியத்தில் இருந்து எதிரிக்கு பாதகமாக அமைந்துள்ள சங்கதிகளை குறித்து கு.வி.மு.ச பிரிவு.313(1)(ஆ)ன் கீழ் விளக்கி வினவியபோது, எதிரி பொய் சாட்சி, பொய் வழக்கு என்றார். எதிரி தரப்பில் சாட்சிகள் இல்லை என்றார்.

**<u>7) பிரச்சனைக்குரிய தீர்வு:-</u>**

கடந்த 01.01.2026ம் தேதி 11.00 மணிக்கு கரூர்நகர காவல்நிலைய சரகம் பாலிடெக்னிக் அருகில் உள்ள முள்காட்டில் இவ்வழக்கின் எதிரி அம்சவள்ளி என்பவர் அரசின் எவ்வித அனுமதியும், உரிமமும் இன்றி தனது சுயலாபம் கருதி சுமார் 180ml அளவுள்ள Honey Day Brandy-7 பாட்டில்கள் மற்றும் சுமார் 650ml அளவுள்ள Black Pearl Beer-6 பாட்டில்களை விற்பனைக்காக வைத்து குற்ற செயல் புரிந்துள்ளார். எனவே எதிரி அம்சவள்ளி என்பவரது செய்கையானது சட்டப்பிரிவு 4(1)(C) TNP Act பிரிவின் படி தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக கரூர்நகர காவல் நிலைய உதவி ஆய்வாளர் அவர்கள் காவல் நிலைய குற்ற எண்.2/2026ல் எதிரியின் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளதாக அரசு தரப்பில் சுமத்தப்பட்ட குற்றத்தினை நிரூபிக்கும் முகமாக அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களையும், சான்றாவணங்களையும் மற்றும் இருதரப்பு வாதங்களையும் பின்வருமாறு பரிசீலிக்கப்பட்டது.

8) இவ்வழக்கில் எதிரி அரசின் எவ்வித அனுமதியின்றி இந்திய தயாரிப்பிலான அயல்நாட்டு மதுபான பாட்டில்களை வைத்திருந்ததாக காவல் துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளார். கரூர்நகர காவல் நிலைய உதவி ஆய்வாளர், அ.சா.1 தலைமைக்காவலர் திரு.யுவராஜா, தலைமைக்காவலர் திரு.சத்யா ஆகிய மூவரும் மதுவிலக்கு அமலாக்க குற்ற தடுப்பு ரோந்து அலுவலாக கரூர்நகர காவல் சரகத்தில் சென்று கண்காணித்து கொண்டிருந்தபோது உதவி ஆய்வாளர் அவர்களுக்கு பாலிடெக்னிக் அருகில் உள்ள முள்காட்டில் மதுபானம் விற்பதாக கிடைத்த ரகசிய தகவலின்படி அங்கு சென்றபோது அங்கு ஒருநபர் போலிசாரை கண்டவுடன் ஓட எத்தனித்தவரை பிடித்து விசாரித்த போது

அவரது அம்சவள்ளி என்றும், அவர் வைத்திருந்த சுமார் 180**ml** அளவுள்ள **Honey Day Brandy**-7 பாட்டில்கள் மற்றும் சுமார் 650**ml** அளவுள்ள **Black Pearl Beer**-6 பாட்டில்களை தன் சுயலாபத்திற்கு விற்பனைக்காக வைத்திருந்ததை அவர் ஒப்புக்கொண்டதன் அடிப்படையில் அவரை கைது செய்து அவரிடமிருந்து மதுபாட்டில்களை கைப்பற்றியதாக மேற்படி அ.சா.1 சாட்சியமளித்துள்ளார்.

9) மேலும் அ.சா.1, எதிரியின் கையில் வைத்திருந்த சுமார் 180**ml** அளவுள்ள **Honey Day Brandy**-7 பாட்டில்கள் மற்றும் சுமார் 650**ml** அளவுள்ள **Black Pearl Beer**-6 பாட்டில்களை தன் சுயலாபத்திற்கு விற்பனைக்காக வைத்திருந்தார் என்றும், அதை தங்கள் முன்னிலையில் உதவி ஆய்வாளர் அவர்கள் கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றியதாகவும் சாட்சியமளித்துள்ளார்கள். இவ்வழக்கில் பொதுமக்கள் சாட்சிகள் யாரும் முன்வராத சூழ்நிலையில் போலிசாரே இவ்வழக்கில் மேற்படி மது பாட்டில்களை கைப்பற்றியுள்ளதும் மேற்படி ஆவணங்களைப் பரிசீலிக்கையில் தெரியவருகிறது. சம்பவயிடமானது பாலிடெக்னிக் அருகில் உள்ள முள்காட்டில் மற்றும் மேற்படி மதுபாட்டில்களை கைப்பற்றிய நேரம் 11.15 மணி என்பதும் தெரியவருகிறது. மேற்கூறிய கூற்றிலிருந்து சம்பவயிடமானது பாலிடெக்னிக் அருகில் உள்ள முள்காட்டு பகுதி என்பதும் நேரம் 11.15 மணி என்பதால் பொதுமக்கள் யாரும் வர வாய்ப்பில்லை என்பதால் போலிசார் முன்னிலையில் எதிரியிடமிருந்து மதுபாட்டில்களை கைப்பற்றியதாக கூறுவது ஏற்றுக்கொள்ளத்தக்கதாகவே உள்ளது.

10) பொதுவாக போலிசார் மட்டும் சாட்சிகளாக இருக்கும் இதுபோன்ற வழக்குகளில் எதிரிதான் குற்றம் சம்பவத்தில் ஈடுபட்டவரா என்பதனை கவனமாக ஆராய வேண்டியது அவசியமாகும். சம்பவ இடமானது மக்கள் நடமாட்டம் இல்லாத முள்காடு பகுதி என்பதால் பொதுமக்கள் சாட்சிகள் யாரும் இல்லாத சூழ்நிலையில் போலிசாரே சாட்சிகளாக இருந்து எதிரியிடமிருந்து மதுபாட்டில்களை கைப்பற்றியுள்ளனர் என்கிற வாதம் ஏற்றுக்கொள்வதாக இருந்தாலும் கூட சம்பவயிடமானது முள்காடுதான் அங்கு

பொதுமக்கள் வர வாய்ப்பில்லை என்பதனை நிரூபிக்க சம்பவயிடத்தின் மாதிரிவரைபடமானது இவ்வழக்கில் ஒரு சான்றாவணமாக சேர்க்கப்படவேண்டும். ஆனால் இவ்வழக்கில் சம்பவயிடத்தின் மாதிரிவரைபடமானது இவ்வழக்கில் ஒரு சான்றாவணமாக போலிசாரால் தாக்கல் செய்யப்படவில்லை. அவ்வாறு பொதுமக்கள் சாட்சியாக யாரும் இல்லாத சூழ்நிலையில் சம்பவயிடத்தில் இருந்து எதிரியிடமிருந்து மது பாட்டில்களை கைப்பற்றும்போது அதனை வீடியோவாக எடுத்து அதனை ஒரு சான்றாவணமாக இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கவேண்டும். ஆனால் அவ்வாறு வீடியோ ஆதாரம் எதையும் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை. மேலும் சம்பவயிடத்தில் எதிரியிடமிருந்து மது பாட்டில்களை கைப்பற்றும்போது பொதுவான ஒருநபரிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெற்று அதனை இவ்வழக்கில் ஒரு சான்றாவணமாக தாக்கல் செய்திருக்கவேண்டும். அவ்வாறு ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. மேற்கூறிய கூற்றுகளை ஆராய்கையில் சம்பவ தினத்தின்போது ஆஜர் எதிரியிடமிருந்துதான் மதுபாட்டில்களை போலிசார் கைப்பற்றினார்கள் என்பதற்குண்டான மேற்கூறிய எந்தவித ஆதாரத்தையும் இவ்வழக்கில் ஒரு சான்றாவணமாக தாக்கல் செய்யாமல் வெறுமனே படிவம் 91 வைத்து மட்டுமே ஆஜர் எதிரிதான் மேற்படி குற்றசம்பவத்தில் ஈடுபட்டார் என்று கூறுவது ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லை. எனவே மேற்கூறிய கூற்றுகளிலிருந்து ஆஜர் எதிரியிடம்தான் சம்பவ தினத்தின் போது மது பாட்டில்களை கைப்பற்றினோம் என்பதற்குண்டான மேற்கூறிய எந்தவித ஆதாரத்தையும் போலிசார் தரப்பிலிருந்து தாக்கல் செய்யாதது புலன் விசாரணையின் மீது பலத்த சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

11) மேலும் அ.சா.1 தனது குறுக்கு விசாரணையில், **“உதவி ஆய்வாளர் எங்களை விசாரித்தபோது எந்தந்த இடத்திற்கு எந்த வாகனத்தில் ரோந்துக்கு சென்றோம் என்பதையும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல்மகசர் எங்கு வைத்து தயார் செய்யப்பட்டது என்றும், எங்கு வைத்து கையெழுத்து வாங்கினார்கள் என்றும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும்**

**மது பாட்டில்களில் அயல்நாட்டு மதுபானம் என எழுதப்பட்ட குறிப்பு இருந்ததா என்றால் இல்லை. எதிரியிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் எங்கள் முன்னிலையில் பெறப்பட்டதா என்றால் இல்லை"** என்றும் கூறியுள்ளார்கள். மேலும் இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி சார்பாக விசாரிக்கப்பட்ட காவல் சிறப்பு உதவிஆய்வாளர் அ.சா.2 திரு.பாபு அவர்களும் தனது குறுக்கு விசாரணையில், அ.சா.1ன் கூற்றுக்கு எதிர்ப்பு எதுவும் தெரிவிக்கவில்லை என்பதால் அவரும் அதனை ஏற்றுக்கொண்டதாகவே தெரிகின்றது. எனவே மேற்கூறிய கூற்றுகளிலிருந்து சம்பவ தினத்தின் போது ஆஜர் எதிரியிடமிருந்துதான் மது பாட்டில்களை போலிசார் கைப்பற்றினார்கள் என்பதை நிரூபிக்க அரசு தரப்பு முற்றிலும் தவறிவிட்டது என்றே இந்நீதிமன்றம் கருதுகின்றது.

12) மேலும் The Tamil Nadu Liquor(Possession for personal consumption) Rules 1996 ன் படி தனிநபர் ஒருவர் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட வெளிநாட்டு மதுபானங்கள் 4.5 லிட்டர் வரையிலும், வெளிநாட்டு மதுபானங்கள் 4.5 லிட்டர் வரையிலும், பீர் 7.8 லிட்டர் வரையிலும், ஒயின் 9 லிட்டர் வரையிலும் தனது சொந்த பயன்பாட்டிற்காக வைத்துக்கொள்ளலாம் என்று கூறுகிறது. இவ்வழக்கில் எதிரி சுமார் 180ml அளவுள்ள Honey Day Brandy-7 பாட்டில்கள் மற்றும் சுமார் 650ml அளவுள்ள Black Pearl Beer-6 பாட்டில்கள் தன் வசம் வைத்திருந்ததாக கூறப்படும் நிலையில் மேற்படி விதியிலுள்ள உச்ச அளவுக்கு உள்ளாகவே வைத்துள்ளதும் தெரியவருகிறது. மேலும் எதிரி விற்பனை செய்ய வைத்திருந்தார் எனும் குற்றச்சாட்டினை ஆராய்கையில், அவர் யாருக்கு விற்பனை செய்தார் என்பது குறித்தோ எதிரியிடமிருந்து வாக்குமூலங்கள் வாங்கியதாகவோ இவ்வழக்கில் எந்த ஆதாரமும் இல்லை. இது சம்பந்தமாக மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் L.Kannan Vs The Sub Inspector of Police, Ambasamudhiram Police Station and another எனும் வழக்கில், **"Further as per the Tamil Nadu Liquor(Possession for personal consumption) Rules 1996 in G.O. Ms. No.75, P&E, dated 16th April**

1996 **and amended vide G.O.(MS) No.14 H.P.EVI Department dated 09.06.2017, the prescribed limit for Indian made Foreign spirit is 4.5 litres but in the impugned S.T.C the quantity is only 1,260 litres. Therefore the petitioner is only having less quantity of prescribed limit. Further so far as section 4(1)(i) of TNP Act is concerned it relates to selling to liquor and intoxicated drugs but here there is no any material to show that the petitioner was selling the above said liquor and investigation officer only recovered a sum of Rs.150/- from the petitioner. Mere Possession of liquor bottles and having money is not sufficient to hold that the petitioner sold the liquor and thereby the charge sheet is liable to be quashed"** என்று கூறியுள்ளது. எனவே மேற்படி தீர்ப்பின் அடிப்படையில் ஆராயும்போது எதிரி விற்பனை செய்வதற்காக மேற்படி மதுபாட்டில்களை வைத்திருந்தார் எனும் வெறும் வாய்மொழியான குற்றச்சாட்டானது தகுந்த ஆதாரங்கள் இல்லாத சூழ்நிலையில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

13) எனவே, மேற்கண்டவாறு வழக்கின் சாட்சிய சான்றாவணங்களை பரிசீலனை செய்த வகையிலும் எதிரி மீதான பிரிவு- U/s. 4(1)(C) TNP Act-ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பால் நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

14) முடிவில், அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்தும் மற்றும் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்களில் இருந்தும் எதிரியின் மீது அரசுத்தரப்பில் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டான ச/பி. 4(1)(C) TNP Act ன் கீழான குற்றமானது சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிருப்பிக்கப்படவில்லை என முடிவு செய்து சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரியை 276(1) BNSS ன்படி விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

15) இவ்வழக்கில் கைப்பற்றப்பட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள **ஆர்.பி.எண்.148/2026** ல் கண்டுள்ள சுமார் 180ml அளவுள்ள Honey Day Brandy-7 பாட்டில்கள் மற்றும் சுமார் 650ml அளவுள்ள Black Pearl Beer-6 பாட்டில்களை மேல்முறையீட்டு காலக்கெடுவிற்குப் பின்னிட்டு காவல் உதவி ஆய்வாளரிடம் ஒப்படைத்து உரிய முறையில் அழித்து அதற்கான ஒப்புதலை நீதிமன்றத்தில் அளிக்க உத்தரவிடுப்படுகிறது.

இத்தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, இன்று 18.06.2026 ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப்பகரப்பட்டது.

BARATH KUMAR
Digitally signed by BARATH KUMAR
Date: 2026.06.18 19:49:24 +0530

**நீதித்துறை நடுவர் எண்.1,**
**கரூர்.**

<u>**அரசுதரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகள்:-**</u>

| **அரசுதரப்பு சாட்சிகள்** | **சாட்சிகளின் பெயர்** | **விவரம்** |
|---|---|---|
| அ.சா.1 | திரு.யுவராஜ், தலைமைக்காவலர் | சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சி |
| அ.சா.2 | திரு.பாபு, காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் | புலன்விசாரணை அதிகாரி(சார்பு) |

<u>**அரசுதரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்கள் :-**</u>

| **அரசுதரப்பு ஆவணங்கள்** | **ஆவணங்களின் விவரம்** | **யார் மூலம் குறியீடு செய்யப்பட்டது** |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | கைப்பற்றுதல்மகசர் | அ.சா.1 |

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.2 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.2 |
| அ.சா.ஆ.3 | படிவம்-91 | அ.சா.2 |
| அ.சா.ஆ.4 | மதுபாட்டில் உள்ள புகைப்படம் | அ.சா.2 |

**எதிரி தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகள்:-** - இல்லை

**எதிரி தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்கள்** :- இல்லை

**அரசு தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்று பொருள்:-** இல்லை

BARATH KUMAR

Digitally signed by BARATH KUMAR
Date: 2026.06.18 19:49:37 +0530

**நீதித்துறை நடுவர் எண்.1,**
**கரூர்.**

**STC No.194/2026 நாள் :18.06.2026**

**எதிரி ஆஜர். தீர்ப்பு அவையறிய பகரப்பட்டது.**

முடிவில், அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்தும் மற்றும் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்களில் இருந்தும் எதிரியின் மீது அரசுத்தரப்பில் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டான ச/பி. 4(1)(C) TNP Act ன் கீழான குற்றமானது சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிருப்பிக்கப்படவில்லை என முடிவு செய்து சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரியை 276(1) BNSS ன்படி விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

இவ்வழக்கில் கைப்பற்றப்பட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள **ஆர்.பி.எண்.148/2026** ல் கண்டுள்ள சுமார் 180ml அளவுள்ள Honey Day Brandy-7 பாட்டில்கள் மற்றும் சுமார் 650ml அளவுள்ள Black Pearl Beer-6 பாட்டில்களை மேல்முறையீட்டு காலக்கெடுவிற்குப் பின்னிட்டு காவல் உதவி ஆய்வாளரிடம் ஒப்படைத்து உரிய முறையில் அழித்து அதற்கான ஒப்புதலை நீதிமன்றத்தில் அளிக்க உத்தரவிடுப்படுகிறது.

BARATH KUMAR

Digitally signed by BARATH KUMAR
Date: 2026.06.18 19:49:49 +0530

**நீதித்துறை நடுவர் எண்.1,**
**கரூர்.**